பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 20] சென்னை: ஆவணி 20 (5—9—72) செவ்வாய் வெளியூர்: ஆவணி 21 (6—9—72) புதன் [இதழ்: 70

அரசுப் பரிசு பெறும் பள்ளியாசிரியர்கள்

சென்னை, செப். 5—
சிறப்பாகப் பணியாற்றிய ஆசிரியர்களைத் தேர்ந்தெடுத்து ஆண்டுதோறும் தமிழக அரசு பரிசு கொடுத்து வருவது தெரிந்ததே.

1970--71-ம் ஆண்டுக்கும் பரிசுக்குரியவர்களாக 180 ஆசிரியர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றனர்.

இவர்களில் 90 பேர் தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள்; மீதி 90பேர்

(4-ம் பக்கம் பார்க்க)

செக்கிழுத்த செம்மலுக்கு விழா

தி. மு. கழக ஆட்சியில் சிலை திறப்பு -- 36 ஆண்டு எண்ணம் ஈடேறுகிறது

23 ஆண்டுகளுக்குமுன் அண்ணா சூட்டிய புகழாரம்

சென்னை, செப். 5—
'கப்பலோட்டிய தமிழன்' என்றும், 'செக்கிழுத்த செம்மல்' என்றும், 'தென்னாட்டுத் திலகர்' என்றும் புகழ்பெற்ற வ.உ. சிதம்பரனார் அவர்களுக்கு இன்று நாடு நூற்றாண்டு விழா எடுத்துத் தனது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறது.

இது, இந்தியா முழுவதிலும் கொண்டாடப்பட வேண்டிய ஒரு தேசியத் திருநாளான போதிலும், தமிழ்நாட்டில் மட்டுமே சீரோடும் சிறப்போடும் கொண்டாடப் பெறுகிறது.

தமிழகத்தில் கலைஞர் தலைமையில் உள்ள கழக அரசு எடுத்துக்கொண்ட தனி முயற்சியின் காரணமாக, விழா பல வகையிலும் சிறப்புடன் கொண்டாடப் பெறுகிறது.

சிதம்பரனாரைச் சிறப்பிக்கும் வகையில், அவர் உருவம் பொறித்த அஞ்சல்தலை வெளியிட வேண்டும் என்ற கோரிக்கை முதலில் மறுக்கப்பட்டபோதிலும், தமிழக அரசின் விடாமுயற்சியின் விளைவாகப் பிறகு ஏற்றுக்கொள்ளப்பட்டு, அந்த அஞ்சல் தலை இன்று இந்திய அரசினால் வெளியிடப்படுகிறது.

இந்த அஞ்சல்தலை வெளியீட்டு விழாவில் தலைமையமைச்சர் இந்திரா காந்தியும் கலந்துகொள்கிறார்.

அதேபோல், தூத்துக்குடியில் நிறுவப்பட்டுள்ள வ. உ. சிதம்பரனாரின் 12 அடி உயர முழு உருவச் சிலையையும் முதலமைச்சர் கலைஞர் தலைமையில் இந்திரா காந்தி திறந்துவைக்கிறார்.

இவ்விழாவில், தமிழக ஆளுநர் கே. கே. ஷா, அமைச்சர்கள் சி. பா. ஆதித்தனார், க. இராசாராம் ஆகியோர் கலந்துகொள்கின்றனர்.

தமிழகத்தின் மற்ற ஊர்களிலும் ஆங்காங்கு வ. உ. சி. நூற்றாண்டு விழாக் கொண்டாடப் பெறுகிறது.

வ. உ. சிதம்பரனார் 1936-ஆம் ஆண்டு மறைவெய்தியபோது அவரது உடல் அடக்கத்துக்குப் பின் தூத்துக்குடியில் நடைபெற்ற இரங்கல் கூட்டத்தில், 'சிதம்பரனாருக்குச் சிலைவைக்க வேண்டும்' என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது; ஆனால் கடந்த 36 ஆண்டுகளாக இந்த எண்ணம் ஈடேற்றப்படவில்லை.

சிதம்பரனாரின் தியாகத்தைத் தங்கள் சுயநலப் பதவி வேட்டைக்குப் பயன்படுத்திக்கொண்ட காங்கிரசார், தாங்கள் ஆட்சி நடத்திய 20 ஆண்டுக் காலமும், இந்த எண்ணத்தை ஈடேற்றாமலே விட்டுவிட்டனர்.

கட்சி — கருத்து வேறுபாடுகளைக் கருதாது, தியாகத்துக்கு மதிப்புக் கொடுக்கும் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்த பின்னர்தான், வ. உ. சிதம்பரனாருக்குச் சிலை வைக்கப்படுகிறது.

சிதம்பரனார் கோவைச் சிறையில் இழுத்த செக்கு, சென்னைக்குக் கொண்டுவரப்பட்டு — காட்சிப் பொருளாக வைக்கப்படுகிறது.

வ. உ. சிதம்பரனாரை நினைவுகூரும் வகையில் தூத்துக்குடி ஆழ்கடல் துறைமுகத்துக்கு வ. உ. சி.-யின் பெயரைச் சூட்ட வேண்டும் என்ற கோரிக்கைகூட மத்திய அரசினால் மறுக்கப்பட்டுவிட்டது; என்றாலும், தமிழ் மக்கள் ஏகோபித்துக் குரல் எழுப்பினால் இந்தக் கோரிக்கையும் வெற்றி பெற்றே தீரும் என்பது உறுதி.

முன்பு இந்தியாவுக்கும் — இலங்கைக்கும் இடையே விடப்பட்ட ஒரு சிறிய கப்பலுக்கு வ. உ. சி.-யின் பெயர் சூட்டப்பட்டது; அந்த நல்ல காரியத்தை வரவேற்று — நமது மகிழ்ச்சியை வெளிப்படுத்திக்கொள்ளும் வகையில் நமது பேரறிஞர் அண்ணா அவர்கள், 'திராவிட நாடு' இதழில் (13-2-49) எழுதிய கட்டுரையில் ஒரு பகுதியை இங்கு தருகிறோம்:—

"மறைந்த மாவீரர் வ. உ. சி. அவர்களையும், நாட்டின் விடுதலைக்காக அவர் ஆற்றிய அரும்பெரும் தொண்டுகளையும் மக்கள் மறக்க முடியாது.

பெரும் புகழும் பெற்றுச் சொந்த வாழ்க்கைக்குத் தங்களுடைய உழைப்பும் தேச பக்தியும் பயன்பட வேண்டுமென்ற சுயநல நோக்கம் கொண்டவர்களைப் போலன்றி, 'உண்மையாகவே நாட்டுக்கு விடுதலையும் -- மக்களுக்கு நல்வாழ்க்கையும் ஏற்பட வேண்டும்' என்ற பொது நல நோக்குடன் பேரையும் புகழையும் விரும்பாமல், ஆடம்பரமற்ற வாழ்க்கையை நடத்தி நாட்டுப் பணியாற்றியவர்!

'வெள்ளையன் இந்நாட்டை விட்டு விரட்டப்பட வேண்டுமானால், அவனுடைய ஆதிக்கத்தின் ஆணிவேரான வியாபாரத் துறையைத்தான் முதலில் கைப்பற்ற வேண்டும்' என்ற ஒரு சிறந்த திட்டத்தை முதலில் வகுத்த பெருமை சிதம்பரனாருக்கே உரியதாகும்.

1906-ல் அவரால் ஆரம்பிக்கப்பட்ட 'சுதேசிக் கப்பல் கம்பெனி' இந்தச் சிறந்த நோக்கத்துடனேயே தொடங்கப்பட்டதாகும்; என்றாலும், அவருடைய திட்டம் வெற்றி பெற முடியாதபடி, அரசாங்கம் அவரை நாட்டைவிட்டே துரத்திவிட்டது! தீவாந்தரத் தண்டனை கொடுக்கப்பட்டது! கடலில் கப்பலோட்ட முயன்ற ஒரு தமிழர், கடல் நடுவே கப்பல் போல மிதந்து கொண்டு இருக்கும் ஒரு தீவில் சிறை வைக்கப்பட்டார்!

ஆறாண்டுகள் பொறுத்து வீரர் சிதம்பரனார் சிறையினின்று வெளியே வந்தபோது, 'வறுமை' என்னும் கொடிய பகைவனே அவரை வரவேற்றான்! வறுமை அவரை ஆட்டிப் படைத்தது! அன்றாட வாழ்க்கையை நடத்துவதுகூட முடியாது போயிற்று! அவரை ஆதரித்த 'அன்பர்கள்' எல்லோரும் கைவிட்டுவிட்டனர்!

நாட்டின் விடுதலைக்காக ஒரு பெரிய அரசாங்கத்தோடு போராடிய சிதம்பரனார், கடைசியாக வறுமையோடு போராடி -- அதில் வெற்றிபெற முடியாமல் 1936-ல் உயிர்நீத்தார்!

எந்தக் காரியத்தைச் செய்ய வேண்டுமென்று அவர் அன்று பாடுபட்டாரோ அந்தக் காரியம் இன்று வெற்றிபெற்றுவிட்டது!

43 ஆண்டுகளுக்கு முன் ஓட்ட வேண்டுமென்று அவர் நினைத்த கப்பல் இன்று ஓடுகிறது; இது அவருடைய கனவை நினைவாக்கும் ஒரு நற்செய்தியாகும்; தமிழ் மக்களுக்கு அவர் உண்டாக்கித் தந்த பெருமையாகும்.

பண்டைக் காலத்தில் கப்பலோட்டிப் புகழ்பெற்ற தமிழர்களின் சிறந்த பண்பை, 'வ.உ.சி. சிதம்பரம்' என்ற கப்பல் நிலைநாட்டிவிட்டது!

ஒப்பற்ற சேவை புரிந்த சிதம்பரனாருக்கு நாடு காட்டவேண்டிய நன்றியறிதலையும், செய்ய வேண்டிய கடமையையும் இதுவரை மறந்திருந்ததுபோல் இனியும் இருக்கக்கூடாதென்பதையும் இந்தச் சமயத்தில் நினைவூட்டுவதோடு, செய்நன்றி கொல்லாத தமிழர் பண்பாட்டினை நிலைநாட்டிடவும் -- சிதம்பரனார் புகழ் என்றும் நிலைக்கவும் -- அவருடைய குடும்பம் மனவேதனையால் நொந்து போகாதபடி பார்த்துக் கொள்ளவும் இப்போதாவது தமிழ் மக்கள் முன்வந்து ஆவன செய்யவேண்டுமென்பதே எமது வேண்டுகோளும் விருப்பமுமாகும்."

விடுதலை வரலாறு முடிந்துவிடவில்லை

ஏழை மக்கள் வாழ்வில் ஏற்றம் பெற்றிட அண்ணா காட்டிய வழியில் அயராது உழைப்போம்

அரசங்குடியில் அண்ணா சிலை திறந்து வைத்து முதலமைச்சர் கலைஞர் சூளுரை

திருச்சி, செப். 5—
"தாழ்த்தப்பட்ட--பிற்பட்ட மக்களுக்கு இந்த அரசு எவ்வளவோ செய்திருக்கிறது; இன்னும் எவ்வளவோ செய்ய வேண்டும் என்று ஆசைப்படுகிறோம்; அந்த ஆசை நிறைவேற--அதனால் ஏழை எளியோர் ஏற்றம் பெற வேண்டுமென்றால், மாநிலங்களுக்கு அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்--அதிகாரங்கள் பரவலாக்கப்பட வேண்டும்! அதுதான் அண்ணா அவர்கள் நமக்குக் காட்டிய வழி! அந்த அண்ணா வழியில் அயராது உழைப்போம்!"

என்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள், அறிஞர் அண்ணா உருவச் சிலையைத் திறந்துவைத்துப் பேசுகையில் சூளுரைத்தார்.

திருச்சி மாவட்டம் அரசங்குடியில் பேரறிஞர் அண்ணாவின் முழு உருவச் சிலையை முதலமைச்சர் நேற்று திறந்துவைத்தார்.

விழாவிற்கு மாவட்டச் செயலாளர் எம். எஸ். வெங்கடாசலம் தலைமை வகித்தார்.

சமுதாய நல அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து, காமாட்சி எம்.எல்.ஏ., திருச்சி வட்டச் செயலாளர் நடராசன், முசிறி வட்டச் செயலாளர் சம்பந்தம் ஆகியோர் பேசினர்.

சிலையை உருவாக்கிய சிற்பி சிதம்பரம் அரிகிருஷ்ணனுக்கு முதலமைச்சர் பொன்னாடை அணிவித்தார்.

அறிஞர் அண்ணா அவர்களின் உருவச் சிலையைத் திறந்து வைத்து முதல்வர் கலைஞர் பேசியதாவது:—

"தமிழகத்தைத் தட்டி எழுப்பிய மக்களிடையே -- புதிய அரசியல் விழிப்புணர்ச்சியை உண்டாக்கிய -- தமிழ் உணர்ச்சியை ஊட்டிய -- தமிழ் பண்பாட்டை உள்ளத்திலே உருவாக்கிய பேரறிஞர் அண்ணா அவர்களின் சிலை இங்கே திறக்கப்படுகிறது.

நமது இதயத்தில் நீக்கமற நிறைந்துள்ள அறிஞர் அண்ணா அவர்கள், இந்த அரசங்குடியில் பிறந்தவருமல்லர் -- அரசர் குடியில் பிறந்தவருமல்லர்! சாதாரணக் குடும்பத்தில் பிறந்து--சாதாரண மக்களுக்காக அயராது உழைத்து -- அசாதாரண காரியங்களைச் செய்து முடிக்கும் ஆற்றலைப் பெற்றிருந்தவர் ஆவார்!

கிராம மக்கள் வாழ்கின்ற இந்த இடத்தில், அறிஞர் அண்ணா அவர்களின் சிலை திறக்கப்படுவது பொருத்தமுடைய ஒன்றாகும்; அவர் தமது வாழ்நாளில் பெரும் பகுதியைக் கிராம மக்கள் -- ஏழை எளிய மக்கள் -- விவசாயிகள் -- பாட்டாளித் தோழர்கள் முன்னேற்றத்திற்காகவே பாடுபட்டார்!

அறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன், 'இந்த அரசு தீட்டுகின்ற எந்தத் திட்டமானாலும், அந்தத் திட்டங்கள் ஏழை எளிய மக்கள் -- கிராமத்து மக்கள் முன்னேற்றத்தை ஒட்டியதாகவே இருக்கும்' என்று கூறினார்.

அந்த அடிப்படையில், 'அவர் தொடங்கி வைத்த வரலாற்றைத் தொய்வின்றி எடுத்து முடித்தாக வேண்டும்' என்ற உறுதியை நாம் அனைவரும் எடுத்துக்கொண்டிருக்கிறோம்.

வட்டச் செயலாளர் சம்பந்தம் பேசும்போது 'அண்ணா அவர்களின் சிலைக்கு அடியில் அவரது பொன்மொழிகளைப் பொறித்து வைத்திருக்கிறோம்' என்று எங்களுக்குச் சுட்டிக் காட்டி அதில் ஒரு பொன்மொழியையும் காண்பித்தார்; 'தேர்தல் என்பது இடையிலே வருகின்ற முக்கிய நிகழ்ச்சி' என்பதுதான் அந்தப் பொன்மொழி வாசகம்!

அதை அவர் எதற்குச் சுட்டிக் காட்டினார் என்று எனக்குத் தெரியாது; எனக்காகத்தான் சொன்னாரா -- அல்லது நமது சட்டமன்ற உறுப்பினர் காமாட்சிக்காகச் சொன்னாரா என்பது அவருக்குத்தான் தெரியும்; எங்களுக்குத் தெரியாது!

தேர்தல் என்பது இடையிலே வருவதுதான் என்றாலும், அதை விட்டுவிட முடியாது; அண்ணா அவர்களும், 'இடையிலே வருகின்ற முக்கிய நிகழ்ச்சி' என்றே சொன்னார்; இதைத் தனிப்பட்ட எவருக்காகவும் அண்ணா அவர்கள் சொல்லவில்லை; எல்லோருக்காகவும்--நண்பர் சம்பந்தத்திற்கும் சேர்த்துத்தான் சொன்னார்.

(4-ம் பக்கம் பார்க்க)

தமிழக அரசின் நல்ல பண்புகள் -- காங்கிரசாருக்கு நல்லாட்சியின் பண்புகளாகத் தெரியவில்லை

[*]

'கவிழ்ப்பு' முயற்சி பலிக்கவில்லை -- மானக்கேடான கிளர்ச்சிக்கு வித்திட்டனர்

[*]

சட்டத்திற்குப் புறம்பான செயல்கள் நடைபெற்றபோதும் பெருந்தன்மையுடன் முதலமைச்சர் நடந்துகொண்டார்

[*]

'முதல் ரவுண்டு' போராட்டத்தில் தோல்வியடைந்தவர்களின் எண்ணம் பற்றித் தமிழக மக்கள் விழிப்புடன் இருக்கவேண்டும் -- சலிப்புணர்வு இல்லாமல் அரசும் செயல்படுவது அவசியம் -- 'காரவான்' ஏட்டின் விளக்கமும் வேண்டுகோளும்

புதுடில்லி, செப். 5—

"1967 பொதுத் தேர்தலுக்குப் பிறகு காங்கிரசு அரசுகள், வெறும் கட்சிகளால் கட்டப்பட்ட மாளிகைகள்போல் சடசடவென்று சரிந்து வீழ்ந்தன! பல மாநிலங்களில் கூட்டு அரசுகள் அமைந்தன! இந்த அதிகார அரசியல் விளையாட்டிலிருந்து தமிழ்நாடு ஒன்றுதான் விதிவிலக்காக விளங்கியது!

"மத்திய ஆட்சியிலிருந்த இ. காங்கிரசார், மாநிலங்களிலிருந்த காங்கிரசு அல்லாத அரசுகளையெல்லாம் ஆட்சிப் பீடத்திலிருந்து வீழ்த்திய பின்னர் – அந்த அரசுகளுக்கெல்லாம் பதில் அரசாக அங்கங்கே இ. காங்கிரசு அரசு ஏற்பட்ட பின்னர் – இந்தியாவின் நிலப் படத்தில் காங்கிரசின் கண்ணைக் குத்தும் ஒன்றாக – ஒரே ஒரு காங்கிரசு அல்லாத அரசாகத் திராவிட முன்னேற்றக் கழக அரசு தமிழ்நாட்டில் விளங்கிவருகிறது!

தி. மு. கழகம் தமிழ்நாட்டில் 1967-ல் ஆட்சிப் பொறுப்பேற்றது; இந்திய யூனியனிலேயே மிகச் சிறந்த ஆட்சியினை நடத்தும் அரசாக தி. மு. கழக அரசு அதுமுதல் சிறப்பாக விளங்கி வருகின்றது!

தமிழ்நாட்டில் தி. மு. கழக அரசு எல்லாத் துறைகளிலும், சீரான முன்னேற்றத்தை – கல்வி, தொழில், சமூக நலன் ஆகிய அனைத்துத் துறையிலும் உறுதியான முன்னேற்றத்தைக் காட்டி வருகிறது!

தொழில் துறையில்கூட இங்கு அமைதியின்மை என்பது, மிகக் குறைந்த அளவுதான், அண்மையில் கம்யூனிஸ்டுகள் சில கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டபோது ஏற்பட்ட நிலைமையைத் தவிர, வேறு வகையில் அமைதிக் குலைவான நிலைமை எதுவும் இங்கு ஏற்படவில்லை!

ஆனால் தமிழக அரசின் இந்த நல்ல பண்புகள் எல்லாம் காங்கிரசாருக்கு ஒரு நல்லாட்சியின் பண்புகளாகத் தெரியவில்லை; எனவே, காங்கிரசுக் கட்சி தங்கள் ஆட்சிக் கவிழ்ப்பு வேலையைச் செயல்பூர்வமாக மற்றெல்லா மாநிலங்களிலும் நிறைவேற்றி முடிவு கண்ட பின்னர் – இப்போது தனது முழு அளவு சினத்தையும் தமிழ்நாடு அரசுக்கு எதிராகத் திருப்பியிருக்கிறது!

கேரளத்தைப் போலன்றி, தமிழ்நாட்டில் மக்கள் மத்தியில் தி. மு. கழக அரசாங்கத்தின்மீது எவ்விதமான அதிருப்தியும் கிடையாது; எனவே, காங்கிரசுக் கட்சியின் 'புயல் படையினர்' தி. மு. கழக அரசுக்கு எதிராக ஏதாவது ஒன்றைக் கிளப்பவேண்டிய நிலைமைக்கு வந்தார்கள்; அண்மையில் இங்கு நடைபெற்ற விவசாயிகள் கிளர்ச்சி எனப்படுவது இந்த வகையில் அமைந்ததுதான்!

மத்தியில் ஆட்சி நடத்தும் காங்கிரசின் மனக்கசப்பு – சகிப்புத் தன்மையில்லாப் போக்கு – பொறுமையிழந்த போக்கு ஆகியவற்றை வைத்துத்தான், விவசாயிகளின் கிளர்ச்சி எனப்படும் மேற்கூறிய கிளர்ச்சியைப் பார்க்க வேண்டும்.

காங்கிரசின் இந்தக் கவிழ்ப்பு முயற்சி பலிக்காது என்பது முன்னமேயே முடிவான ஒன்று; முடிவில் இந்த மானக்கேடான கிளர்ச்சி புகைந்து போயிற்று! அத்துடன் தமிழ்நாட்டில் உள்ள தி. மு. கழக அரசு, 'உடைக்க முடியாததொரு நல்லரசு' என்பது மேற்கூறிய விவசாயக் கிளர்ச்சிமூலம் புலனாயிற்று!

காங்கிரசாரும் – இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியினரும் இந்தக் கிளர்ச்சிமூலம் நடத்திய தங்கள் முதல் ரவுண்டு போராட்டத்தில் தோல்வியடைந்து விட்டனர்; ஆனால் தமிழக அரசும் – தமிழக மக்களும், அந்தக் கட்சியினரின் எண்ணங்கள் பற்றி எப்போதும் விழிப்பாகவே இருக்கவேண்டும்!

தமிழகத்தின் பொருளாதார சமூக முன்னேற்றங்கள் தொடர்பில் தமிழக அரசு மேலும் அதிக அக்கறை காட்டி தொடர்ந்து செயல்பட வேண்டும்; இந்த வகையில் அச்சமோ, 'பக்கபலம் இல்லை' என்ற உணர்வால் ஏற்படக்கூடிய சலிப்பு உணர்வோ இல்லாத முறையில் தொடர்ந்து செயல்பட வேண்டும்.

"அதேநேரத்தில் மக்களும் அரசியல்வாதிகள் விஷயத்தில் விழிப்போடு இருக்கவேண்டும்; அவர்களது கைப்பாவையாகிவிடக்கூடாது; உண்மையான குறைபாடு எதுவுமில்லாமல் – அரசியல்வாதிகள் பேச்சில் மயங்கி – கிளர்ச்சி போன்றவற்றில் ஈடுபடக்கூடாது"

என்று புதுடில்லியிலிருந்து வெளிவரும் 'காரவான்' என்ற ஏடு சுட்டிக்காட்டி எச்சரிக்கை செய்திருக்கிறது; அந்த ஏட்டில் வெளிவந்த கட்டுரையில், டில்லியின் அதிகார அரசியல் விளையாட்டுகளையும், காங்கிரசு அல்லாத ஆட்சிகளைக் கவிழ்த்த மத்தியில் ஆட்சிப் பீடத்திலிருந்த காங்கிரசுக் கட்சியின் நடவடிக்கைகளையும் விளக்கிவிட்டு மேலும் கூறியிருப்பதாவது:—

"விவசாயக் கிளர்ச்சி புகைந்து போனதன் காரணமாகக் காங்கிரசுத் தலைவர்களுக்கு--முக்கியமாகத் தலைமையமைச்சருக்கும், முன்னாள் திட்ட அமைச்சரான (தற்போது தொழில் வளர்ச்சித் துறை அமைச்சர்) சுப்பிரமணியத்திற்கும் பெரும் அளவில் முகம் குன்றிப்போய் விட்டது!

இந்த நிகழ்ச்சிகளோடு தனக்கு தொடர்பு ஏதும் இல்லை என்று காட்டிக்கொள்ளும் ஆவலில், தலைமையமைச்சர் இந்திரா காந்தியும் முடிவில் ஒன்றைச் சொன்னார்--'மின்கட்டண உயர்வு பற்றிய பிரச்சினையில் எனக்கு எதிர்ப்புணர்வு கிடையாது; ஆனால் இது தொடர்பில் நிலைமைகள் கையாளப்பட்ட முறையைத்தான் நான் எதிர்க்கிறேன்' என்று கூறினார்.

இதிலிருந்து தன்னைக் காத்துக்கொள்ள சி. சுப்பிரமணியம் கையாண்ட முறை விசித்திரமானது; 'மௌனம் பொன்னுக்குச் சமானம்' என்று இவர் இருந்துவிட்டார்.

முதன் முதலில் விவசாயிகளின் இந்தக் கிளர்ச்சிக்குத் திட்டமிட்டதே இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சிதான்; வழக்கமான வேலைநிறுத்தங்கள் மூலம் தன்னை--கட்சியைப் பலப்படுத்தும் சூழ்ச்சித் திறத்தோடு கம்யூனிஸ்டுக் கட்சி இதனைத் திட்டமிட்டது.

தி.மு. கழக அரசாங்கத்தை எதிர்ப்பதற்கு நீண்ட நாளாக ஒரு சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்த காங்கிரசுக் கட்சி, கம்யூனிஸ்டுகளின் இந்தத் திட்டத்தைத் தங்கள் உடைமையாக்கிக் கொண்டது!

தமிழ்நாட்டு இ. காங்கிரசாரின் இந்தக் கிளர்ச்சி நோக்கத்திற்கு, இக்கட்சியின் பெரிய தலைவர் சி. சுப்பிரமணியம் முழு ஆதரவு கொடுத்தார்; இவர், தமக்கு ஆதரவாகத் தமிழ்நாட்டில் பலம் வாய்ந்த ஒரு கட்சி அமைப்பு இல்லாதவர்; மராட்டியத்தில் சவானுக்குள்ள கட்சி அமைப்பு-ஆதரவு பலமோ, பீகாரில் ஜெகஜீவன்ராமுக்கு உள்ள கட்சி அமைப்பு--ஆதரவு பலமோ, தமிழ்நாட்டில் சி. சுப்பிரமணியத்திற்குக் கிடையாது!

தனக்குப் பின்னால் பெரிய அளவில் கட்சி பலமில்லாத--வேரில்லாத வெற்று மரமாக நிற்கும் இவர், தமிழ்நாட்டில் இ. காங்கிரசின் மேற்கூறிய கிளர்ச்சிக்கு ஆதரவாக நின்றார்!

இந்தக் கிளர்ச்சியை இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியும்--இ. காங்கிரசாரும் மட்டும் நடத்துவதை சிண்டிகேட் தலைவர் காமராசரால் பார்த்துக்கொண்டிருக்க முடியவில்லை; தவறான குதிரைமீதே பந்தயம் கட்டுவதில் எப்போதும் பேர் பெற்றவர் காமராசர்; எனவே, அவரும் இந்தக் கிளர்ச்சியில் சேர்ந்துகொண்டார்.

இந்தக் குழப்பத்தில் தாங்களும் கலந்துகொண்டு, காற்றுள்ளபோதே தூற்ற நினைத்தார்கள்--சுதந்திராக் கட்சியினரும்--சனசங்கத்தினரும்!

இந்த விவசாயக் கிளர்ச்சிக்கு மையமாக இருந்த பிரச்சினை என்னவென்றால், 10.8 காசாக இருந்த மின் கட்டணத்தை வசதி படைத்த பெரிய விவசாயிகளுக்கு 'பிளாட் ரேட்' வீதத்தில் யூனிட் ஒன்றுக்கு 12 காசுகளாக உயர்த்திய நிகழ்ச்சிதான்.

ஆனால் இதை வைத்து இந்தக் 'கிளர்ச்சியை', இ. காங்கிரசார் ஆகியோர் விரும்பியதுபோல் மிகப் பெரிய கிளர்ச்சியாக்கி--அதில் பெரிய அளவில் மற்றவர்கள் பங்கு பெற கவர்ச்சி உருவம் கொடுக்க முடியாதே--எனவே, இந்தக் கிளர்ச்சிக்குத் திட்டமிட்டவர்கள், மின் கட்டண உயர்வு பற்றிய பிரச்சினையுடன்கூட, 'தொங்கும் வாட்'களாக மேலும் 12 கோரிக்கைகளைத் தங்கள் கிளர்ச்சிக்குப் பக்கபலமாக்கிக் கொண்டார்கள்.

இந்த 12 கோரிக்கைகளில், 'வசதி படைத்த பெரிய நிலக்கிழார்களுக்கு வருமான வரி விதிப்பைத் தவிர்க்க வேண்டும்' என்ற கோரிக்கையும் ஒன்றாகும்.

இந்தக் கோரிக்கைகளில் தீவிரத்தன்மை வாய்ந்ததோ, முக்கியமானதோ எதுவும் கிடையாது; அத்துடன், இதற்கு முன்னதாக அரசாங்கத்திடம் விடப்பட்ட கோரிக்கைகள் எதுவும் இதில் இல்லை.

ஆனால் மின் கட்டணத்தைப் பொறுத்தவரையில், இப்படி மின் கட்டணத்தை உயர்த்த வேண்டும் என்று மத்திய அரசு தமிழகத்திற்கு எழுதியிருந்த ஒன்றாகும்; அதன்படிதான், தமிழக அரசு மின் கட்டணத்தை உயர்த்த முடிவு செய்தது; இ. காங்கிரசுக் கட்சியே ஆட்சி புரியும் மாநிலங்கள் பலவற்றில் அண்மையில்தான் மின் கட்டணம் உயர்த்தப்பட்டிருக்கிறது.

இந்நிலையில், தமிழ்நாட்டில் தி.மு. கழக அரசுக்கு எதிராக (விவசாயக் கிளர்ச்சி என்ற பெயரில்) கிளர்ச்சி செய்ய முனைந்தவர்கள், ஜூலை மாதம் 5-ந் தேதி கடையடைப்பு--வேலைநிறுத்தம் போன்றவைகளை நடத்தத் திட்டமிட்டனர்.

இதில் இந்தியக் கம்யூனிஸ்டுகளுக்கும்--இந்திரா காங்கிரசாருக்கும் தி.மு. கழக அரசைக் கவிழ்ப்பதுதான் முக்கியக் குறிக்கோளாக இருந்தது; இதை மனத்திற்கொண்டு இந்த வேலைநிறுத்தம் ஆகியவற்றின் மூலம் மிகப் பெரியதொரு கொந்தளிப்பை உண்டாக்க முழு முயற்சி எடுத்துக்கொண்டனர்.

இந்த இரண்டு கட்சிகளையும் சேர்ந்த கிளர்ச்சிக்காரர்கள்--முக்கியமாக ஊழியர்கள் எனப்பட்டவர்கள், கடைகளின் கதவுகளை மூடுவதில் எங்கெங்கும் வன்முறையையும் கட்டாயத்தையும் கையாண்டார்கள், போக்குவரத்தைத் தடுக்கச் சாலைகளில் தடை போட்டார்கள்; பேருந்துகளுக்குத் தீ வைத்தார்கள்; போலீசார் மீது கல்லெறிந்தார்கள்.

இதன் மூலம் இவர்களுடைய நோக்கம், 'போலீசாருக்கு ஆத்திரமூட்ட வேண்டும்' என்பதாகும்; போலீசார் ஆத்திரமடைந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்ய வேண்டும்--அதன் மூலம் மக்கள் சாக வேண்டும்- தி. மு. கழக அரசாங்கத்திற்குக் கெட்ட பெயர் உண்டாக வேண்டும்--என்பதுதான் அந்த இரண்டு கட்சியினரின் நோக்கமாகும்.

இந்த இரண்டு கட்சியினரின் நோக்கத்தைத் தமிழக அரசு உணர்ந்தே இருந்தது. எனவே போலீசார் மிகவும் விழிப்போடு நடந்துகொண்டார்கள்--பொறுமை காட்டினார்கள்--அடக்கத்தோடு நடந்துகொண்டார்கள், என்றபோதிலும், மிகப் பெரிய அளவில் பொருள் நட்டம் ஏற்படாமல் தடுக்க--மிகப் பெரிய அளவில் வன்முறை ஏற்படாமல் தடுக்கப் போலீசார் சில இடங்களில் துப்பாக்கிப் பிரயோகம் செய்யும் நிலைமை ஏற்பட்டது.

இதன் பிறகு, இ. காங்கிரசாரும்--இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியும் எதிர்பார்த்திருந்த மக்கள் எதிர்ப்புக் கிளர்ச்சி எதுவும் நடைபெறவில்லை; காரணம் --

வசதி படைத்த பெரிய மிராசுதாரர்கள் மீது விதிக்கப்பட்ட மின் கட்டண உயர்வு மக்களைக் கவரக்கூடியதொரு பிரச்சினையல்ல என்பதுதான்!

அப்படி மின் கட்டண உயர்வு ஏற்படுத்தப்பட்டது தி.மு. கழக அரசாங்கமே மேற்கொண்டதொரு நடவடிக்கை அல்ல; அது மத்தியில் உள்ள காங்கிரசு அரசின் தாக்கீதின் மீது உயர்த்தப்பட்டதாகும் என்பதுதான்.

தி.மு. கழக அரசின் சாதனைகளை இதன் மூலம் மக்கள் மனத்திலிருந்து அகற்ற கிளர்ச்சிக்காரர்களால் முடியவில்லை; தி.மு. கழக அரசாங்கத்தின் நல்ல நோக்கத்தினை அதன் முந்திய சாதனைகளின் அடிப்படையை வைத்து மக்கள் நன்கு புரிந்துகொண்டிருந்தனர் என்பதுதான்.

கிளர்ச்சிக்காரர்களின் வன்முறைச் செய்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கவும் -- இந்தக் கிளர்ச்சி தொடர்பில் மத்திய அரசு, கட்சி நோக்கத்துடன் நடந்துகொண்ட முறையினை எடுத்துக் காட்டவும் -- தி.மு. கழகமும் அதன் கூட்டுக் கட்சியினரும், ஜூலை 15 அன்று எதிர்ப்பு நாள் நடத்தினார்கள்.

இந்த எதிர்ப்பு நாள் நிகழ்ச்சிகள் மிகப் பெரிய அளவில் நடைபெற்றன; மக்கள் தங்கள் சொந்த ஈடுபாட்டோடும், ஆர்வத்தோடும் இந்த எதிர்ப்பு நாளை நடத்தினார்கள்; இதைக் கண்டதும், விவசாயக் கிளர்ச்சிக்காரர்களுக்கு பாதத்தின் கீழ் நிலம் பிளந்த நிலைமையே ஏற்பட்டது!

ஜூலை 16 அன்று தமிழகமெங்கும் கிளர்ச்சி நடத்தப் போவதாகத் தமிழக அரசாங்கத்திற்கு முன்னறிவிப்பு விடுத்திருந்த விவசாயக் கிளர்ச்சிக்காரர்கள், தங்கள் கிளர்ச்சிக்கு ஆதரவு இல்லாத நிலைமையைக் கண்டனர்; தங்கள் கிளர்ச்சி அழைப்பைத் திரும்பப் பெற்றனர்; கிளர்ச்சியைத் திரும்பப் பெறவும் -- அரசாங்கத்துடன் பேச்சு நடத்தவும் இணங்கினர்.

இதன் பிறகு, ஜூலை 13, 18, 19 ஆகிய நாட்களில் முதலமைச்சர் கருணாநிதி அவர்களுக்கும் -- விவசாயிகள் பிரதிநிதிகளுக்கு மிடையே பேச்சு நடைபெற்றது.

விவசாயக் கிளர்ச்சியின்போது கைது செய்யப்பட்ட ஆறாயிரத்திற்கு மேற்பட்டவர்களை அரசாங்கம் விடுதலை செய்ய இசைந்தது; கிளர்ச்சியின்போது மரணமடைந்தவர்களின் குடும்பம் ஒவ்வொன்றுக்கும் ரூ. 5,000 வழங்க தமிழக அரசு முன் வந்தது.

100 யூனிட் வரை விவசாயத்திற்குப் பயன்படுத்தப்படும் மின்சாரத்திற்கு— யூனிட்டுக்கு 12 காசுகள் என்றும், நூறு யூனிட்டுக்கு மேல் ஒவ்வொரு யூனிட்டுக்கும் 11 காசுகள் என்றும் மின் கட்டணம் வசூலிக்க அரசு இசைந்தது.

'வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் அரசாங்கத்திற்கும் -- கூட்டுறவு வங்கிகளுக்கும் தரவேண்டிய கடனைத் தவணை முறையில் கொடுக்கலாம்' என்று அரசு அனுமதி அளித்தது.

விவசாயிகள் மீது போடப்பட்ட வழக்குகள் திரும்பப் பெறப்படும்-- இது தொடர்பிலான நீதி விசாரணையும் நிறுத்தப்படும் என்றும் முடிவு செய்யப்பட்டது.

வருமான வரி தொடர்பில் சிறிய விவசாயிகள் சம்பந்தப்பட்ட பிரச்சினையில் மேலும் சலுகைகள் அளிப்பது பற்றி ஆலோசிக்க அரசு இசைந்தது.

சலுகைகள் பிரச்சினைகளில் விதிவிலக்கு வரம்பு 7 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்றிருப்பதை பத்து ஸ்டாண்டர்டு ஏக்கராக உயர்த்த முடிவு செய்யப்பட்டது.

இவ்வாறு முதலமைச்சர் அவர்களுக்கும் -- விவசாயிகள் பிரதிநிதிகளுக்குமிடையே நடந்த பேச்சுக்கள் மூலம் விவசாயிகள் கிளர்ச்சி எனப்பட்ட ஆறு வாரக் கிளர்ச்சி நின்றது.

இதன் மூலம், சட்டத்திற்குப் புறம்பான செயல்கள் நடைபெற்றபோது முதலமைச்சர் அவர்கள் அவற்றை எவ்வளவு உறுதியோடு சமாளித்தார் என்பது புலப்பட்டது; அதே போன்று, 'பேச்சு' என்று வரும்போது எவ்வளவு பெருந்தன்மையோடு முதலமைச்சர் நடந்து கொண்டார் என்பதும் தெளிவாயிற்று."

குடிசைப் பகுதிகள் வளர்ச்சியால் விளையக்கூடிய ஆபத்து

சுட்டிக்காட்டிக் குடியரசுத் தலைவர் வி. வி. கிரி எச்சரிக்கை

மக்கட் பெருக்கத்துக்கேற்பத் திட்டமிட்டு வீடுகள் கட்ட அரிய யோசனை

சென்னை, செப். 4–

'குடியிருக்கும் வீடுகளை மக்களுக்குக் கட்டித் தருவதில் காலந்தாழ்த்துவதற்கு இடந்தரக்கூடாது; இதற்கென்று நாம் துணிச்சலாகத் திட்டமிட்டு – உறுதியாகச் செயல்பட வேண்டும்.

'நமது நகரங்களில் வளர்ந்துவரும் குடிசைப் பகுதிகள் மனித கௌரவத்துக்கே இழுக்காக உள்ளன; வெறுப்பு – வன்முறை – குற்றங்கள் ஆகியவற்றின் உற்பத்திக் களங்களாகவும் இவை விளங்குகின்றன; குடிசைப் பகுதிப் பிரச்சினையை நாம் உடனடியாகத் தீர்க்காவிட்டால், அந்தப் பிரச்சினையே நம்மை ஆட்கொண்டுவிடும் என்று அஞ்சுகிறேன்"

என்று, குடியரசுத் தலைவர் திரு. வி. வி. கிரி அவர்கள், சென்னை நகரக் கூட்டுறவு வீடு அடமான சங்கத்தின் வைர விழாவைத் துவக்கிவைத்து உரையாற்றுகையில் குறிப்பிட்டார்; அவர் மேலும் கூறியதாவது:—

"கடந்த இருபது ஆண்டுகளில் நமது நாட்டில் வீட்டு வசதி நிலைமை மிகவும் மோசமாகி விட்டிருப்பது மறுக்க முடியாத உண்மை; முன் எப்போதும் இருந்திராத அளவுக்கு மக்கள் தொகைப் பெருக்கமும்--வீட்டு வசதியின் குறைவான வளர்ச்சியும் ஏற்கனவே உள்ள நிலைமையை மேலும் மோசமாகி விட்டன.

வீடு பற்றாக்குறை ஆண்டுதோறும் 20 இலட்சம்--என்ற விகிதத்தில் வளர்ந்து கொண்டே போகிறது; ஆனால் ஒவ்வொரு ஆண்டிலும் சுமார் 3 இலட்சம் வீடுகளே கட்டப்படுகின்றன; சமுதாயக் கொள்கைகளில் ஏற்பட்டுவரும் மாற்றங்களும் வீடு தட்டுப்பாட்டை அதிகரிக்கச் செய்கின்றனவாயுள்ளன.

முன்பெல்லாம் கூட்டுக் குடும்ப முறை வழக்கத்திலிருந்ததால், ஒரே வீட்டில் பல குடும்பங்கள் வசித்தன; கூட்டுக் குடும்ப முறை இப்போது அநேகமாக மறைந்து விட்டதால், ஒவ்வொரு குடும்பத்துக்கும் தனித்தனி வீடு தேவைப்படுகிறது.

உள்ளூரில் கிடைக்கும் பொருட்களையே இயன்ற அளவுக்குப் பயன்படுத்தி, வசதியான--நயமான வீடுகளை நாம் கட்ட வேண்டும்; ஏழை நாடான இந்தியாவில் வாழும் நாம், முன்னேறிய நாடுகளைப் போன்று மாடமாளிகைகளை --- ஆடம்பரமான வீடுகளையும் கட்டுவதற்காக நமது சொற்ப வசதிகளையும், கிடைப்பதற்கு அரிய பொருள்களையும் விரயம் செய்யக்கூடாது.

இன்று எஃகு --- சிமெண்டு ஆகிய பொருட்கள் கிடைப்பதில் கட்டுப்பாடு நிலை காணப்படுகிறது; இத்தகைய பொருட்களை மிகக் குறைந்த அளவுக்கும் பயன்படுத்தி வீடு கட்டும் முறைகளைப் பின்பற்ற வேண்டியதன் அவசியத்தை நாம் உணரவேண்டும்.

நமது சொற்ப வசதிகளை இயன்ற அளவுக்குச் சிறப்பாகப் பயன்படுத்திக் கொள்வதற்கு ஏற்ற, நயமான -- விரைவான வீடு கட்டும் முறைகளைக் கண்டுபிடிப்பது நமது பொறியாளர்கள் --- கட்டிடக் கலைஞர்கள், ஆகியோரின் கடமையாகும்.

"**சமதர்மச் சமுதாயத்தை நோக்கி நம்மை வழிநடத்துவதில் கூட்டுறவு இயக்கத்துக்குப் பெரும் பங்கு உண்டு, நமது வாழ்க்கையின் பொருளாதார -- சமூக அம்சங்களில் கூட்டுறவு இயக்கம் இன்னமும் தனது சுவடுகளைப் பதிவிக்க வில்லையென்றால், அதற்குக் காரணம், 'எல்லோருக்காகவும் ஒவ்வொருவரும் -- ஒவ்வொருவருக்காகவும் எல்லோரும்' என்ற அடிப்படைத் தத்துவத்தைச் செயல் முறையில் பின்பற்றாததுதான்.**

குறுகிய மனப்பான்மைகொண்டு தங்கள் சுயநலன்களைப் பாராட்டாமல், சமுதாயத்தின் நலன்களுக்கு முதலிடம் கொடுக்கும் தன்னலமற்ற ஆண்களும், பெண்களும் பெரும் அளவில் நமக்குக் கிடைத்தால்தான் நாம் முன்னேற முடியும்."

வேலையற்றிருக்கும் பொறியாளர்கட்கு புதிய பயிற்சித் திட்டம்

தமிழ்நாடு அரசின் குறிக்கோள்கள் -- தரப்படும் உதவிகள் பற்றி விளக்கம்

கோவை, செப். 4 –

வேலை கிடைக்காமலிருக்கும் எஞ்சினியர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காகப் புதிய திட்டம் ஒன்றைத் தமிழ்நாடு அரசு தயாரித்திருக்கிறது; இதன்கீழ் அவர்களுக்கு அளிக்கப்படும் உபகாரச் சம்பளத்தில் (ஸ்டைபெண்டில்) 50 சதவிகிதத்தை அவர்களை வேலைக்கு வைத்துக்கொள்வோரும், பாக்கியை அரசும் தரும்.

இந்தத் திட்டத்தின் விவரத்தை தொழில் துறை இயக்குநர் எச். பி. என். ஷெட்டி விளக்கிக் கூறியதாவது:—

" வழக்கமான பயிற்சித் திட்டத்தில் இல்லாத ஒரு நன்மை இதில் இருக்கிறது; சிறு தொழில்கள் பெயரளவில் ஒரு தொகையை ஊதியமாகக் கொடுத்துவிட்டுத் தொழில் நுட்பத் தேர்ச்சி பெற்றவர்களை வேலைக்கு வைத்துக் கொள்ள முடியும் என்பதுதான் அது;

இந்தப் பயிற்சித் திட்டத்தில் தொழிற்சாலைகளும் சம்பந்தப்படுவதால், பயிற்சி அளிக்கும் பிரச்சினையில் அவை அதிகப் பொறுப்பு ஏற்கும்.

தவிர, பயிற்சி முடிந்ததும் அவர்களை அந்தத் தொழிற்சாலைகளிலேயே வேலைக்கு எடுத்துக் கொள்ளவும் அதிக வாய்ப்பு இருக்கும்.

இந்தத் திட்டத்தின்கீழ் நடப்பு ஆண்டில் சுமார் 700-லிருந்து 800 எஞ்சினியர்களுக்கும் -- ஒரு சில விஞ்ஞானப் பட்டதாரிகளுக்கும் பயிற்சி அளிக்கப்படும்; அவர்களுக்கு மாதம் ரூ. 300 உபகாரச் சம்பளமும், டிப்ளமாதாரர்களுக்கு மாதம் ரூ. 200 உபகாரச் சம்பளமும் அளிக்கப்படும்; பயிற்சிக் காலம் ஓராண்டு ஆகும்.

தொழில் நுட்பத் தேர்ச்சி பெற்றவர்களுக்கு வேலையில்லாத் திண்டாட்ட நிவாரண உதவிக்காக இந்த ஆண்டு அரசு ரூ. 35 இலட்சம் ஒதுக்கியிருக்கிறது; அதில் ரூ. 22 இலட்சம் வேலை கிடைக்காமலுள்ள எஞ்சினியர்கள் சொந்தத்தில் தொழில் நடத்தத் தொழிற்சாலைகள் தொடங்குவதற்காகச் செலவிடப்படும்; ரூ. 6 இலட்சம் பயிற்சியாளர்களுக்கு உபகாரச் சம்பளம் தருவதற்காகச் செலவிடப்படும்."

சீனாவிடமிருந்து போர்ப் படகுகள்

பாகிஸ்தான் வாங்கியதை இந்திய அரசு அறியும்

கடல்எல்லையில் பாதுகாப்புக்கு பயன்படுத்தப்படுகின்றனவாம்

புதுடில்லி, செப். 2—

சீனாவிடமிருந்து பாகிஸ்தான் போர்ப் படகுகள் வாங்கியதாக நாடாளுமன்றத்தில் தகவல் தரப்பட்டது.

நாடாளுமன்ற மேலவையில் எஸ். என். மிஸ்ரா, சத்பால் கபூர் ஆகியோர் இதுபற்றிக் கேட்ட கேள்விக்கு, இராணுவ அமைச்சர் ஜெகஜீவன்ராம் கூறியதாவது:—

"பாகிஸ்தான் தன் ஆயுதப் பலத்தைப் பெருக்கிக் கொள்ள சீனாவின் உதவியை நாடியிருக்கிறது; சீனாவிடமிருந்து பல போர்ப் படகுகளைப் பாகிஸ்தான் வாங்கியிருக்கிறது; இந்தத் தகவலை இந்திய அரசு அறியும்.

பாகிஸ்தான் கடல் எல்லையில் இந்தப் படகுகள் பாதுகாப்புக்குப் பயன்படுத்தப்படுகின்றன.

இந்தியாவின் தற்காப்புக்கு நமது படைபலத்தையும் அதிகரிக்க தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

புதிய போர் விமானங்கள் தயாரிக்கவும் திட்டமிடப்பட்டிருக்கிறது."

கல்கத்தாவுக்குக் கலைஞர் செல்கிறார்

சென்னை, செப். 4—

கல்கத்தா தமிழ்ச் சங்கத்தின் அழைப்பை ஏற்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள், நவம்பர் திங்களில் கல்கத்தா செல்கிறார்.

கல்கத்தா அறிஞர் அண்ணா தமிழ்ச் சங்கத்தின் சார்பில் - சங்கத் தலைவர் சி. வீரபத்திரன் தலைமையில் சென்னைக்கு வந்துள்ள தூதுக்குழுவினர், நேற்று முதலமைச்சர் கலைஞர் அவர்களைச் சந்தித்துக் கல்கத்தாவுக்கு வருகை தருமாறு அழைப்பு விடுத்தார்.

இந்த அழைப்பை முதலமைச்சர் ஏற்றுக்கொண்டார்; நவம்பர் திங்களில் கல்கத்தாவுக்கு வருவதாகவும், தேதி பின்னர் அறிவிப்பதாகவும் தெரிவித்தார்; முதலமைச்சர் கல்கத்தா செல்வது இதுவே முதல் தடவையாகும்.

ஒலிம்பிக் போட்டியில்

இந்தியக் குழுக்களின் திறமையற்ற நிலை

புதுடில்லி, செப். 4—

"மேற்கு ஜெர்மனியின் மூனிச் நகரில் நடைபெறும் ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டுள்ள இந்திய விளையாட்டுக் குழுவினர், திறமை -- சிறப்பு ஏதும் இல்லாதவர்களாகவே இருக்கின்றனர்.

"தேர்வுக் குழுவினர், தங்களுக்கு வேண்டியவர்களுக்குச் சலுகை காட்டும் போக்குதான் இதற்குக் காரணமாகும்"

என்று மக்களவையில், சங்கர் தயாள் சிங் என்பவர் குறை கூறினார்; அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"விளையாட்டுக் குழுவினரும் -- மந்திரிசபையாளரிடமும் அதிகாரிகள் நடந்துள்ள விதம் குறித்து விசாரணை நடத்த வேண்டும்.

"இந்திய மற்றோர் குழுவைச் சேர்ந்தவர்கள் காயமடைந்தபோது, இந்தியக் குழுவினருடன் சென்ற டாக்டர்கள் அந்த இடத்தில் இருக்கவில்லை; அவர்கள் 'சஸ்பெண்டு' செய்யப்பட வேண்டும்."

மாநில சுயாட்சி பற்றித் தி.மு.க. பொதுக் குழு விவாதம்

செய்தியாளர்களிடம் கலைஞர் விளக்கம்

திருச்சி, செப். 4—

திருச்சியில் முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம் செய்தியாளர் கேட்ட கேள்விகளும்—முதலமைச்சர் அளித்த பதிலும் வருமாறு :—

கேள்வி :— "தி. மு. கழகப் பொதுக் குழுவில் சிறப்பாக மாநில சுயாட்சி பற்றி விவாதிக்கப்படுமா ?"

முதல்வர் :— "பல சிறப்பான பொருட்களில் அதுவும் ஒன்ருக இருக்கும்."

எதிர்க் கட்சிகளின் வழக்கமான பல்லவி

கேள்வி :— "வருவாய்த்துறை வாரிய உறுப்பினர்கள் எல்லாக் கிராமங்களுக்கும் சரியாகச் சென்று வறட்சிப் பகுதிகளைப் பார்வையிடவில்லை என்று எதிர் கட்சிக்காரர்கள் குறை கூறியிருக்கிருர்களே ?"

முதல்வர் :— "எதிர்க் கட்சிக்காரர்கள் வழக்கமாக ஏதாவது சொல்ல வேண்டும்; அந்த அடிப்படையில் இதையும் சொல்லியிருக்கிருர்கள்; வருவாய்த்துறை வாரிய உறுப்பினர்கள் வறட்சிப் பகுதிகளைப் பார்வையிட்டு அதற்கான அறிக்கையையும் தந்து விட்டார்கள்; நான் சென்னை சென்றதும், வருவாய்த்துறை அமைச்சருடன் கலந்து பேசி எந்த எந்தப் பகுதிக்கு—எந்த அளவுக்கு வறட்சி நிவாரண நிதி ஒதுக்குவது என்று முடிவு செய்வேன்."

தவறு செய்பவர்களைக் கழகம் கண்டிக்கத் தவருது

கேள்வி :—"தஞ்சை மாவட்டக் கூட்டுறவு வங்கித் தலைவர் மாணிக்கவாசகம் மீது என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள் ?'

முதல்வர் :—"கூட்டுறவு வங்கித் தலைவர் மாணிக்கவாசகம், கழக உறுப்பினர் பொறுப்பு உட்பட அவர் வகித்துவந்த எல்லாப் பொறுப்புக்களிலிருந்தும் தற்காலிகமாக நீக்கி வைக்கப்பட்டிருக்கிருர்; 'பாரபட்சமற்ற முறையில் அரசு நடந்துகொள்கிறது' என்பதற்கு இது மேலும் ஒரு எடுத்துக்காட்டாகும்; மற்றவர்கள் தவறு செய்யும்போது அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கச் சற்றுத் தாமதமானலும், சொந்தக் கட்சியில் உள்ளவர்கள் தவறு செய்வதைப் பொறுத்துக்கொள்ள மாட்டோம்; அரசாங்கப் பதவிகளையோ, அரசாங்கச் சார்புடைய பதவிகளையோ தவருகப் பயன்படுத்துபவர்கள் யாராக இருந்தாலும், கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று நான் முன்பே அறிவித்திருக்கிறேன்."

கி. மனோகரன் முழு நலம் பெற்ருர்

புதுடில்லி, செப். 4—

டில்லி வெலிங்டன் மருத்துவ மனையில் தங்கி சிகிச்சை பெற்று வந்த நாடாளுமன்ற மக்களவை தி. மு. க. குழுத் தலைவர் திரு. கி. மனோகரன் முழு நலம் பெற்று வீடு திரும்பினர்.

கடந்த வாரம் உடல்நிலை பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சேர்ந்த கி. மனோகரனை, நாவலர் இரா. நெடுஞ்செழியன், மொரார்ஜி தேசாய், தினேஷ் சிங் ஆகியோர் சென்று பார்த்து உடல்நலம் விசாரித்தனர்.

ஆத்தூர் நகர தி. மு. க. கிளை நிர்வாகப் பொறுப்புக் குழு நியமனம்

சேலம் மாவட்டம் ஆத்தூர் தி. மு. க. கிளை நிர்வாகக் குழு 16—3—72 முதல் கலைக்கப்பட்டு, கிளை நிர்வாகப் பொறுப்பு சேலம் மாவட்டச் செயலாளர் அவர்களால் மேற்கொள்ளப்பட்டு வந்தது; அந்தப் பொறுப்பு இன்று முதல் மாவட்டச் செயலாளர் அவர்களின் பரிந்துரைக்கேற்பக் கீழ்க்காணும் மூவர் குழு மேற்கொள்ளும் என்பதுடன், இனி, கீழ்க்காணும் குழுவினரிடமே நிர்வாக சம்பந்தப்பட்ட விவரங்களுக்கு தொடர்பு கொள்ளுமாறு ஆத்தூர் நகரக் கழகத் தோழர்கள் இதன்மூலம் கேட்டுக் கொள்ளப்படுகிருர்கள்.

நிர்வாகப் பொறுப்புக் குழுவினர் :—

1. வீ. பழனிவேலு எம்.எல்.ஏ.
2. பீ. ஏ. ஆறுமுகம்
3. வி. எஸ். அம்பாயிரம்

'அறிவகம்', சென்னை-13
2—9—1972

என். வி. நடராசன்,
துணைப் பொதுச் செயலாளர்

போரில் வீர மரணமடைந்த வீரர்களின் மனைவியருக்கு இலவச வீடுகள்

தமிழ்நாடு அரசின் சீரிய திட்டம்

சென்னை, செப். 4—

கடந்த ஆண்டு பாகிஸ்தானுடன் நடைபெற்ற போரில் வீரமரணமடைந்த தமிழ்நாட்டு வீரர்களின் மனைவியருக்குத் தமிழ்நாடு அரசு இலவசமாக வீடுகளை வழங்குவதற்குத் திட்டமிட்டிருக்கிறது; இதற்கான ஏற்பாடுகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

இதுபற்றித் தென் மண்டல இராணுவத் தலைமையகத்தைச் சேர்ந்த அதிகாரிகளுக்கும்—தமிழ்நாடு அரசுக்குமிடையே உயர் மட்டப் பேச்சுவார்த்தைகள் நடந்து முடிந்துதுள்ளன.

கடந்த போரில், தமிழ்நாட்டைச் சேர்ந்த 61 வீரர்கள் வீரமரணமடைந்தனர்; இவர்களது மனைவியருக்கு ஏற்கனவே கட்டி முடிக்கப்பட்ட வீடுகளைத் தமிழ்நாடு அரசு இலவசமாக வழங்கும் என்றும், அத்தகைய வீடுகள் இல்லாத இடங்களில் புதிய வீடுகள் கட்டித்தரப்படும் என்றும் கூறப்படுகிறது.

போரில் ஊனமடைந்த போர் வீரர்களுக்கும்—மரணமடைந்த போர் வீரர்களின் குடும்பத்தினருக்கும் வீரமானியங்களையும்—இலவச நிலம் பட்டாக்களையும் தமிழ்நாடு அரசு வழங்கிவருவது தெரிந்ததேயாகும்.

வீரர்களின் பிள்ளைகளுக்கு சைக்கிள் பரிசு

போரில் மாண்ட வீரர்களின் பிள்ளைகளுக்கு வழங்குவதற்காக 'டியூப் இன்வெஸ்ட்மெண்ட்ஸ் இந்தியா லிமிடெட்' நிறுவனம் 15 சைக்கிள்களைப் பரிசளித்திருக்கிறது.

நாட்டின் பிற பகுதிகளிலும் இவ்வாறு பரிசளிப்பதற்காக மேலும் 75 சைக்கிள்களை வழங்குவதற்கு அந் நிறுவனம் முன்வந்திருக்கிறது.

விடுதலை வரலாறு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அதிலே மற்ருெரு வாசகத்தை குறிப்பிட்டுக் காண்பித்தார்; 'விடுதலை வரலாறு என்பது அத்தோடு முடிந்து விடுவதல்ல' என்று சொன்னதைக் காட்டினர்.

இதை வைத்துக்கொண்டு பத்திரிகைக்காரர்கள் சிலர், பிரிவினைக்குச் சம்பந்தப்படுத்தி எழுதக்கூடும்; ஆனல், 'விடுதலை வரலாறு என்பது அத்தோடு முடிந்துவிடுவதல்ல' என்றுதான் அண்ணா கூறினரே தவிர, 'விடுதலைப் போராட்டம்' என்று கூறவில்லை!

"போராட்ட வரலாறு முடிந்தது என்றாலும், சுபிட்சமான வாழ்வு எல்லோருக்கும் கிடைத்திட நாம் இன்னும் போராட வேண்டியிருக்கிறது; சாதாரண ஏழை எளிய மக்கள் வாழ்வு வளம் பெற வேண்டும்; நகர மக்களோடு போட்டி போட்டுக் கொண்டு கிராம மக்களும் வளமோடு வாழ்கின்ற வாய்ப்பு வசதிகள் உருவாக்கப்பட வேண்டும்; இந்த அரசு கிராம விவசாய மக்களின் வாழ்வில் ஒளியேற்றவும், பிற்படுத்தப்பட்ட மக்கள்—தாழ்த்தப்பட்ட மக்கள்—ஒடுக்கப்பட்ட மக்கள் ஆகிய அனைவரும் ஓரினம் என்று சொல்லப்பட்டாலும் அவர்கள் சமுதாயத்தில் இன்னும் மிதித்துத்தான் எண்ணப்படுகின்றனர்—நசுத்தப்படுகின்றனர்; ஆகவே, 'அனைவரும் மனிதர்கள்—அனைவரும் தமிழர்கள்; அனைவருக்கும் எல்லா நலனும், வாழ்வும் கிடைக்கின்ற நிலை உருவாகும் வரையில் விடுதலை வரலாறு முடிந்து விடுவதில்லை"

என்றுதான் அண்ணா அவர்கள் சொன்னர்.

'ஆகவே, 'தமிழகம் இந்தியாவிலிருந்து விடுதலை பெற வேண்டும்' என்று சொல்லவில்லை—தி. மு. கழகம் அப்படிச் சொல்லவில்லை!

"மாநிலங்கள் அதிக அதிகாரம் பெறுதல் வேண்டும்; ஆந்திரம்—கேரளம்—ஒரிசா—மராட்டியம் போன்ற மாநிலங்களானலும், அவற்றின் உரிமைகள்—அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்" என்பதுதான் அது!

அறிஞர் அண்ணா அவர்கள் தாம் இறுதியாக எழுதிய கட்டுரையில், மாநில சுயாட்சி பற்றிக் குறிப்பிட்டு—அதை நமக்கு உயிலாக எழுதி வைத்துச் சென்ருர். அதையே நாளும் மக்கள் மத்தியில், அவரது கருத்துக்களை எடுத்துச் சொல்லி வாதாடுகிறோம்—அதற்காகப் பாடுபட்டு வருகிறோம்!"

தேசீய விருதுபெறும் ஆசிரியர்கள்

புதுடில்லி, செப். 5—

ஆசிரியர் நாளையொட்டி 99 ஆசிரியர்களுக்கு இந்த ஆண்டில் தேசிய விருது வழங்கப்பட்டிருக்கிறது.

இவர்களில் 9 ஆசிரியைகள்—55 தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள்—35 உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்கள்—9 சமஸ்கிருத ஆசிரியர்கள் உள்ளனர்.

ரூ. 1,000 ரொக்கமும்—சிறப்புச் சான்றிதழும் இவர்களுக்குத் தரப்படும்.

இவர்களில் தமிழ்நாட்டுத் தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் 6 பேர்களாவர்.

உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்கள் 3 பேர்களாவர்.

சமஸ்கிருத ஆசிரியர் ஒருவராவார்.

அஞ்சுகம் இல்லப் புதிய கட்டிடம்

கலைஞர் திறந்து வைக்கிருர்

சென்னை அஞ்சுகம் நகர் (111-வது வட்டம்) அண்ணா நெடும் பாதையில் கட்டப்பட்டுள்ள அஞ்சுகம் இல்லக் கட்டிடத்தை, கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் திறந்து வைக்கிருர்.

இந்த விழா, 7—9—72 மாலை 4 மணிக்கு பொதுச்செயலாளர் நாவலர் தலைமையில் நடைபெறும்.

கழகப் பொருளாளர் புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். விளக்கேற்றி வைப்பார்.

மக்கள் நல்வாழ்வு அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் குழந்தைகட்குச் சீருடை வழங்குவார்.

அமைச்சர் சி. பா. ஆதித்தனர் நூல்கள் வழங்குவார்.

அமைச்சர் திருமதி சத்தியவாணி முத்து—அஞ்சுகம் அம்மையாரின் படத்தையும், மதுரை மேயர் எஸ். முத்து எம்.எல்.சி.—ஈ. வே. ரா. நாகம்மையார் படத்தையும், அமைச்சர் மன்னை நாராயணசாமி—மூவலூர் இராமாமிர்தத்தம்மையார் படத்தையும், அமைச்சர் இராசாராம்—டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் படத்தையும், அமைச்சர் சாதிக்பாட்சா—சத்தியா அம்மையார் படத்தையும், அமைச்சர் செ. மாதவன்—வெற்றிச்செல்வி அன்பழகன் படத்தை அமைச்சர் ஓ. பி. இராமன்—பேரறிஞர் அண்ணா படத்தையும், அமைச்சர் எஸ். இராமச்சந்திரன்—கலைஞர் படத்தையும் திறந்து வைப்பார்கள்.

மற்றும் அமைச்சர் அன்பில் தர்மலிங்கம், மேயர் காமாட்சி செயராமன், நீலநாராயணன் எம்.எல்.சி., முரசொலி மாறன் எம்.பி., முன்னுள் மேயர்கள் முனுசாமி, சா. கணேசன், வை. பாலசுந்தரம், சோ. கி. மூர்த்தி எம்.சி., மோகனப்பா எம்.சி. ஆகியோர் கலந்துகொள்வர்.

கட்டி முடித்தபின் அரசுக்குச் சந்தேகம்

ஆராய்ந்து கூறுமாறு ஒரு நபர் குழு நியமனம்

பம்பாய், செப். 4—

ரூ. 1 கோடி செலவில் தூர்வாரும் இயந்திரம் ஒன்று பம்பாயில் கடந்த பிப்ரவரியிலிருந்து பயன்படுத்தப்படாமல் கிடக்கிறது.

இந்தத் தூர் வாரும் இயந்திரத்தை உருவாக்கித் தருமாறு மாராட்டிர அரசு, பம்பாய்துறைமுகத்திலுள்ள கப்பல் கட்டும் தளமான 'பெஜகான்' துறையிடம் கேட்டிருந்தது; அந்த நிறுவனமும் பல மாதங்கள் இதன் கட்டுமானத்தில் ஈடுபட்டு, கடந்த பிப்ரவரி 10-ந் தேதி மாராட்டிர அரசிடம் அதனை ஒப்படைத்தது.

ஆனல் மாநில அரசுக்கு இப்போது ஒரு சந்தேகம் வந்து விட்டது; 'இதைக் கட்டுவதற்கு உத்தரவிட்டபோது சரியான அளவு கொடுக்கப்பட்டதா' என்பதுதான் அது; இது பற்றி ஆராய்ந்து கூறுமாறு ஒரு நபர் குழு ஒன்றை அரசு இப்போது நியமித்துள்ளது.

சிமெண்டு ஆலைத் தொழிலாளர்கள் பிரச்சினையில் தீர்வு

மாதம் ரூ. 25 இடைக்கால நிவாரணம்

புதுடில்லி, செப். 5—

சிமெண்டு ஆலைகளின் நிர்வாகிகள்—தொழிலாளர்கள் ஆகியோரின் பிரதிநிதிகள், இடைக்கால நிவாரணம் சம்பந்தமாக இசைவான திட்டம் ஒன்றை உருவாக்கினர்.

இத்திட்டத்தின்படி, 1972 சூன் திங்களிலிருந்து மாதம் ரூ. 25 இடைக்கால நிவாரணமாகத் தரப்படும்.

வேலை நிறுத்தக் காலத்துக்கு ஊதியத்துக்கு சமமான தொகை முன்பணமாக ஆகஸ்டு மாத ஊதியத்துடன் தரப்படும்; இந்தத் தொகை செப்டம்பரிலிருந்து பிப்ரவரி வரை 6 மாதாந்தரத் தவணைகளில் பிடிக்கப்படும்.

அரசு பரிசு பெறும்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்கள்.

ஒவ்வொருவருக்கும் ரூ 200 ரொக்கப் பரிசும்—பாராட்டு இதழும், ரூ. 80 மதிப்புள்ள வெள்ளிப் பதக்கமும் வழங்கப்படும்.

பரிசளிப்பு விழா பிறகு நடைபெறும்.

தஞ்சை மாணிக்கவாசகம் விலக்கிவைக்கப்பட்டார்

பொதுச்செயலாளர் நாவலர் அறிவிப்பு

திருச்சி, செப். 4—

"தஞ்சை மாவட்டக் கூட்டுறவு வங்கித் தலைவர் மாணிக்கவாசகம், கழக உறுப்பினர் பொறுப்பு உட்பட எல்லாப் பொறுப்புக்களிலிருந்தும் விலக்கி வைக்கப்பட்டிருக்கிருர்"

என்று கழகப் பொதுச்செயலாளர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், இங்கு செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு [illegible]